4th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பற்பல மானியங்களின்கீழ் ஏற்பட்ட மொத்த மிகைச் செலவு சுமார் 1 கோடியே 15 லட்சம் ரூபாய் ஆகும். இச் செலவினங்களை முறைப்படுத்தும் பொருட்டு, சட்டப் பேரவை தனது ஒப்புதலை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1963-64-ம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுகளுக்கான மானியத் தேவைகளின் விவர அறிக்கையை இம் மன்றம் ஏற்குமாறும் வேண்டிக் கொள்கிறேன்.

VI.—SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1966-67—PRESENTATION.

MR. SPEAKER: The Hon. Chief Minister will now present the Second Supplementary Statement of Expenditure.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே. 1966-67-ம் ஆண்டின் இரண்டாம் துணை மதிப்பீடுகளைச் சபையின் முன் சமர்ப்பிக்கின்றேன். பல்வேறு மானியக் கோரிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மானியக் கோரிக்கைகளின் மொத்தம் ரெவின்யூக் கணக்கில் 36 லட்சம் ரூபாயும், மூலதன கடன் கணக்குகளில் 2 கோடியே 55 லட்சம் ரூபாயும் ஆகும். சட்ட மன்றத்தில் இப்போது சமர்ப்பிக்கப்படும் துணை மானிய கோரிக்கைகள், முக்கியமாக பொதுக் கணக்குக் குழு விதித்திருக்கிறபடி "புதுப்பணித்" திட்டங்களின் கீழ் வருகிற திட்ட வேலைகளுக்குச் சம்பந்தப்படுபவையாகும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இத் துணை மானியக் கோரிக்கையின் கீழ் கேட்கப்படும் நிதி ஒதுக்கத்தில் பெரும்பகுதி, விவசாய உற்பத்திக்கு நெருங்கிய தொடர்புள்ள கூட்டுறவு, நீர்ப்பாசனம், வேளாண்மை போன்ற தலைப்புகளில் அடங்கும் திட்டங்களைப் பற்றியதாகும். நடப்பு ஆண்டில் நமது மாநிலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில், விரைவில் பலனளிக்கும் பல திட்டங்களை அரசாங்கம் தொடங்கியிருக்கிறது. இவற்றில், அதிக விளைச்சல் தரும் பயிர் வகைத் திட்டத்தைக் குறித்துச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ் அதிக விளைச்சல் தரும் பயிர் வகைத் திட்டத்தைக் குறித்துச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் அதிக விளைச்சல் தருகிற, அதிக உட வகைளை ஏற்கக்கூடிய பயிர் வகைளை உறுதியான பாசன வசதி பெற்றுள்ள பகுதிகளில் விளைவிப்பது நமது நோக்கமாகும். இந்தத் திட்டத்தின்படி விளைவிக்கப்பட்ட ADT-27 என்கிற முக்கிய நெல் வகை, நடப்புப் பருவத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நமக்கு உற்சாகமளிக்கும் வகையில் மிக நல்ல பலன்களைத் தந்திருக்கிற தென்பதை அறிய இம் மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்களென்று நம்புகிறேன். நடப்பு ஆண்டில் குறுவைச் சாகுபடிப் பரப்பளவில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல் இந்த

[திரு. எம். பக்தவத்சலம்] [4th November 1966

வகை நெல் பயிர் செய்யப்பட்டுள்ளது தற்போது நமக்குக் கிடைத்துள்ள அறிக்கைகளிலிருந்து, இந்த வகை நெல் பயிர் செய்யப்பட்டுள்ள நிலங்களில் சராசரி மாசூல் ஏக்கர் ஒன்றுக்கு ஏறக்குறைய 3,700 ராத்தல் அளவிற்குக் கிடைக்குமென்று தெரிகிறது. இதற்குமுன் சாதாரணமாகக் கிடைத்து வந்த மாசூல் அளவு ஏக்கர் ஒன்றுக்குச் சராசரி 2,400 ராத்தலே ஆகும்.

சிறு பாசனத் திட்டங்களுக்குச் செய்துள்ள முதலீட்டையும் நடப்பு ஆண்டில் பெரிதும் உயர்த்தி இருக்கிறோம். கடந்த துணை மதிப்பீடுகளில், கிணறு தோண்டும் திட்டத்திற்காக 2 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்பட்டதை இம் மன்றத்தினரின் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின் கீழும், தூர் வாரி நிலத்தைப் பண்படுத்தும் திட்டங்களின் கீழும் பல புதிய வேலைத் திட்டங்களுக்கும் நாம் அனுமதி வழங்கியுள்ளோம். இவற்றிற்குச் சட்ட மன்றத்தின் ஒப்புதலை அடையாள மானியங்களின்கீழ் கோரியுள்ளோம். விவர அறிக்கையில் 42-வது கோரிக்கையின் கீழ் கொடுத்துள்ள பற்பல திட்டங்களின் விவரங்களைக் கவனிக்கும்படி கனம் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிலைமை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய குறுகிய காலச் சாகுபடிக் கடன்களைத் திரும்பக் கொடுக்க அல்லல்படும் குடியானவர்களுக்கு உதவ வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்துள்ளது. இதற்கிணங்க, தமிழ்நாடு கூட்டுறவு பாங்கின் வேளாண்மைக் கடன் உறுதி நிதியை வளப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மோசமான பருவ நிலைமைகளால் விளைச்சல் குறைந்து, அதன் காரணமாக கடன்களைத் தீர்க்க கஷ்டப்படும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குப் பரிகாரம் அளிக்கும் வகையில், அவர்கள் வாங்கியுள்ள குறுகிய காலச் சாகுபடிக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றிக்கொள்வதற்கு இந்த ஏற்பாடுகள் உதவியாய் இருக்கும். தற்போதைய துணை மதிப்பீடுகளில் இதற்கென்று 30 லட்சம் ரூபாய் நிதிவகை செய்யும்படிக் கோரப்பட்டுள்ளது.

இன்றியமையாப் பண்டங்களின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை அதிகமாக வற்புறுத்திச் சொல்ல வேண்டியதில்லை. நகர மக்களின் அடிப்படைத் தேவையாயுள்ள இன்றியமையாப் பண்டங்கள் நியாயமான விலைகளில் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காக பெரிய நகரங்களில் எல்லாம் சிறப்பு அங்காடிகள் Super Markets நிறுவும் ஒரு திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. சென்னை மாநகரில் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் (T.U.C.S.) நடத்தும் கூட்டுறவுச் சிறப்பு அங்காடியை நிறுவியதன் மூலம் இத் திட்டம் நன்முறையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும் இத்தகைய இன்னொரு பண்டகசாலை செயல்படத் தொடங்கியிருக்கிறது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூலதன முதலீடு செய்வதற்கென்று இத் துணை மானியக் கோரிக்கைகளில் 16 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

4th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

நமது மாநிலத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை நிறுவுவதிலும் அவற்றை விரிவுபடுத்துவதிலும் அரசாங்கம் நல்ல முறையில் ஊக்கம் அளித்து வருகிறது. மூன்றாவது திட்டகால அளவில் கூட்டுறவுத் துறையில் நிறுவப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகளில் பிழியும் திறன் நாள் ஒன்றுக்கு 2,500 டன்னிலிருந்து 3,500 டன் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. நான்காம் திட்ட காலத்தில், இச் சர்க்கரை ஆலைகள் மேலும் விரிவுபடுத்துவதற்கேற்ற நிலையை எய்தியுள்ளன. வட ஆற்காடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தனது அன்றாட பிழியும் திறனை crushing capacity 800 டன்னிலிருந்து 1,250 டன் அளவிற்கு உயர்த்த உத்தேசித்துள்ளது. அந்த ஆலையின் பங்கு மூலதனத்திற்கு 7.5 லட்சம் ரூபாய் மூதலீடு செய்வதற்காக இந்தத் துணை மானிய மதிப்பீடுகளில் நிதி வகை செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூரிலுள்ள புதிய மருத்துவக் கல்லூரிக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்காகவும் இத் துணை மானியக் கோரிக்கைகளில் 10 லட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. மருத்துவர்களை உருவாக்குவதற்கான வசதிகளைப் பெருக்கும் பணியில், கோயம்புத்தூரில் நிறுவப்பட்டுள்ள புதிய மருத்துவக் கல்லூரி ஒரு முக்கிய கட்டத்தைக் குறிக்கிறது. மூன்றும் திட்டத்தின் தொடக்கத்தில் மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டு தோறும் 600 மாணவர்களை மட்டுமே சேர்த்துக்கொள்ள வாய்ப்பு இருந்தது. நடப்பு ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை 1,075-ஆக உயர்த்தியுள்ளோம். இதனால், வரும் ஆண்டுகளில் கிராமப் பகுதிகளில் மருத்துவ உதவிக்குரிய வசதிகளை மேன்மேலும் பெருக்க முடியும். மற்றும், தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் பகுதியாக தொழில் துறையில் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகளை மேலும் உயர்த்துவதிலும் நாம் மிக முன்னேறியிருக்கிறோம். இன்ஷ்யூர் செய்து கொண்ட தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு மருத்துவ உதவிகளை ஆண்டுதோறும் 59 லட்சம் ரூபாய் உத்தேசச் செலவில், விரிவுபடுத்துவதற்காக தற்போதைய துணை மானியக் கோரிக்கைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இச் செலவில் மாநில அரசாங்கத்தின் பங்கு ஏறக்குறைய எழில் ஒன்றாகும். எஞ்சியச் செலவைத் தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஏற்கும்.

இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மற்ற திட்டங்களைப் பொறுத்தவரையில், சிறப்பான விளக்கம் எதுவும் தேவையில்லையெனக் கூறி, இத் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

VII.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS PRIVATE EDUATIONAL INSTITUTIONS (REGULATION) BILL, 1966 (L.A. BILL NO. 14 OF 1966).

MR. DEPUTY SPEAKER: Now we will take up clause-by-clause consideration of the Bill.